# விபஸ்ஸனா செய்தி மடல்

மலர்-6, இதழ்-2, டிசம்பர்- 2012 | ஒரு மடலின் விலை-ரூ 2.50 | விபஸ்ஸனா தியான மையம்
தமிழ் மாதப் பத்திரிக்கை | ஆண்டு சந்தா-ரூ 30 | தம்ம சேது, சென்னை, தமிழ்நாடு

**[விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை]**

## தர்ம தூதர் பூர்ணர்

**(திரு. சத்திய நாராயண கோயங்கா)**

ஸூனாபராந்த நகரத்தின் வியாபாரியான பூர்ணர் அவரது தம்பியுடன் வியாபரத்திற்காக ஸாவத்திக்குச் சென்றார். அங்கு மிகவும் அதிர்ஷ்டவசமாக அவர் பகவானின் தொடர்பில் வந்தார். தம்மத்தின் தொடர்பில் வந்தார். பகவானால் கற்றுத்தரப்பட்ட தம்மத்தின் மீது அவர் ஈர்க்கப்பட்டார். அவரது நாட்டின் மக்கள் சடங்குகளிலும் குருட்டுத்தனமான தவறான நம்பிக்கைகளிலும் மூழ்கியுள்ளார்கள் என்பதை அவர் உணர்ந்தார். அவர்கள் தூய தர்மம் பற்றியும் அதனை எவ்வாறு பயிற்சி செய்வது என்பதைப் பற்றியும் அறியாமல் இருந்தார்கள். அவர்களுக்கு தூய தர்மத்தைப் பயிற்சிக்க தெரிந்துவிட்டால், அவர்களுக்கு நலன் உண்டாகும். நான் அவர்களுக்கு தூய தருமத்தை கற்பிப்பேன். இவ்வாறு சிந்தித்து, அவர் தமது வியாபரத்தை தம்பியிடம் ஒப்படைத்து, தம் சொந்த ஊருக்குச் செல்ல முற்பட்டார்.

இதனை முன்கொண்டு அவர் பகவானிடம் ஆசீர்வாதம் வாங்கச் சென்றார். எனது மக்களுக்கு தருமத்தை கற்பிக்க ஆசைப்படுகிறேன் என்றும் கூறினார்.

பகவான் அவரை சோதிக்க விரும்பினார்.

பூர்ணா! என்னிடம் தருமத்தை கற்றபின் நீ எந்த நகரத்தில் வசிக்க போகிறாய்?

ஐயனே! ஸூனாபராந்த என்று அழைக்கப்படும் ஒரு நகரம் இருக்கிறது. அங்கு தான் நான் வசிக்கிறேன். (இன்று மும்பையில் இருக்கும் கோராய் என்ற பகுதி தான் அந்நாட்களில் ஸூனாபராந்த் என்று அழைக்கப்பட்டது)

பூர்ணா! ஸூனாபராந்தின் மக்கள் மிகவும் கரடுமுரடானவர்கள் ஆயிற்றே! பூர்ணா! ஒருவேளை, ஸூனாபராந்தத்தின் மக்கள் உன்னை நிந்தித்து மிரட்டினால் உனக்கு என்னவாகும்?

ஐயனே! ஒருவேளை ஸூனாபராந்தத்தின் மக்கள் என் மீது அவ்வாறு செய்தால், அவர்கள் மிகவும் பண்புள்ளவர்களாக இருப்பதால் தான் என் மீது கை வைக்கவில்லை, என்னை அடிக்கவில்லை என்று நான் நினைத்துக் கொள்வேன். பகவானே! நான் அவ்வாறு தான் எண்ணுவேன்! இனியவரே! நான் அவ்வாறு தான் பாவிப்பேன்!

பூர்ணா! ஒருவேளை, அவர்கள் உன் மீது கை வைப்பார்களானால், உன்னை அடிப்பார்களானால், உனக்கு என்னவாகும்?

ஐயனே! ஒருவேளை அவர்கள் என்னை அடிப்பார்களானால், ஸூனாபார்ந்தத்தின் மக்கள் மிகவும் பண்புள்ளவர்களாக இருப்பதால் தான் அவர்கள் கட்டைகளால் என்னை அடிக்கவில்லை என்று நான் எடுத்துக் கொள்வேன். பகவானே! நான் அவ்வாறு தான் எண்ணுவேன்! இனியவரே! நான் அவ்வாறு தான் பாவிப்பேன்!

பூர்ணா! ஒருவேளை, ஸூனாபராந்தத்தின் மக்கள் உன்னை கட்டைகளால் அடித்தால், உனக்கு என்னவாகும்?
ஐயனே! ஒருவேளை அவர்கள் அவ்வாறு செய்தால், அவர்கள் மிகவும் பண்புள்ளவர்களாக இருப்பதால் தான் என்னை தடிகளால் அடிக்கவில்லை என்று நான் எடுத்துக் கொள்வேன்.

ஒருவேளை ஸூனாபராந்தத்தின் மக்கள் உன்னை தடிகளால் அடித்தால், உனக்கு என்னவாகும்?

ஐயனே! ஒருவேளை அவர்கள் அவ்வாறே செய்தாலும், அவர்கள் மிக பண்பானவர்கள் என்றே தான் நினைப்பேன். ஏனெனில், அவர்கள்

என்னை எந்தவொரு ஆயுதத்தாலும் அடிக்கவில்லையே!

பூர்ணா! ஒருவேளை அவர்கள் ஆயுதங்களால் அடித்தால், உனக்கு என்னவாகும்?
ஐயனே! அவ்வாறே அவர்கள் செய்தாலும் கூட, அவர்கள் மிக பண்பானவர்கள் என்று தான் எடுத்துக் கொள்வேன். ஏனெனில், அவர்கள் என்னை கொல்லவில்லையே!

பூர்ணா! ஒருவேளை அவர்கள் உன்னை கொன்றுவிட்டால், உனக்கு என்னவாகும்?
ஐயனே! ஒருவேளை அவர்கள் என்னை கொன்றுவிட்டால், சில மக்கள் இந்த உடல் மற்றும் வாழ்க்கையில் சலிப்படைந்து தற்கொலை செய்வதற்காக ஒரு தூக்கிலேற்றுபவனைத் தேடி செல்வார்கள்; ஆனால் இவர்களோ, நான் தேடுவதற்கு முன்பே கிடைத்து விட்டார்களே என்று தான் நான் நினைத்திக் கொள்வேன்.

பூர்ணா! சரி, இந்த தர்ம ஆட்சியில் இணைந்து நீ ஸூனாபராந்தத்தில் வசிக்கச் செல்லலாம்.
அப்போது, பூர்ணர் பகவானின் கூற்றை ஏற்றுக் கொண்டு, ஆமோதித்தி, அவரை வணங்கி, வளம் வந்து, பிக்ஷுப் பாத்திரத்தையும், துறவாடையையும் எடுத்துக் கொண்டு ஸூனாபராந்தத்தை நோக்கி விரைந்தார். அங்கு சென்றடைந்ததும், அவர் அங்கேயே வசிக்க துவங்கினார்.

அப்போது, பூர்ணர், அந்த மழைக்காலத்தில் ஐந்நூறு மக்களைத் தம்ம ஆசிரியராக நியமித்தார். அதே மழைக்காலத்தில், அவரும் மூன்று ஞானங்களைத் தரிசித்து முக்தி அடைந்தார்.

# கஸி பாரத்வாஜர்

ஒரு வலிமைமிக்க மனிதர் பிச்சை வாங்குவதை கண்டு, ஒரு இல்லறத்தார் அவரை குத்தலாக பேசுவார். அவரை கண்டித்தப்படி - “நீ முடமானவன் அல்ல. பலமிக்க மனிதராகத் தான் உள்ளாய். ஏன் பிச்சை எடுக்கின்றாய்? உழைத்து ஏன் உனது வயிற்றை நிரப்பிக் கொள்ளக் கூடாது? நானும் கூட அதிகம் உழைத்து தான் செல்வம் சம்பாதித்துள்ளேன்.” என்று கூறுவார்.

இம்மாதிரியான நிகழ்ச்சிகள் இன்றும் கூட அடிக்கடி பார்க்க முடிகின்றது.

இன்று எப்படியோ அன்றும் அவ்வாறே தான். 2600 வருடங்களுக்கு முன்பிருந்த பாரதத்திற்கும் இது ஒரு விசித்திரமான நிகழ்ச்சி அல்ல.

அந்நாட்களில் பகவான் புத்தர் *ஏகநாளா* என்னும் பிராமணர்களின் கிராமத்தில் வசித்து வந்தார். அவர் காலை நேரத்தில் பிக்ஷுக்காக புறப்பட்டார். கஸி பாரத்வாஜரின் வயல்களுக்கு அருகில் அவர் வந்தடைந்தார். அப்பொழுது, அங்கு உணவு படைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அவர் அங்கு நின்று கொண்டிருந்ததை கண்ட பண்ணக்காரரான கஸி பாரத்வாஜர் மிகுந்த ஆணவத்துடன் கூறலானார் -

“ஸமணரே! நான் நிலத்தை உழவு செய்கிறேன், விதை விதைக்கிறேன். உழவு செய்து, விதைத்து உண்கிறேன். நீங்களும் உழவு செய்யுங்கள், விதை விதையுங்கள். உழவு செய்து, விதைத்து உண்ணுங்கள்.

- பிராமணரே! நானும் தான் உழவுகிறேன், விதைக்கிறேன். உழவு செய்து, விதைத்து உண்கிறேன்.
- ஸமணரே! நீ எவ்வாறு விவசாயம் செய்கிறாய்? எங்கே உமது பயிரும், பயிரிடுதலுக்குரிய சாமான்களும்?
- பிராமணரே! சிரத்தை (நம்பிக்கை) எனது விதையாகும், தவம் எனது பாசனம்(மழைநீர்), ஞானம் எனது கலப்பையாகும். அடக்கம் அக்கலப்பையும் பிடியாகும், விழிப்புணர்வு பழமாகும்(பலனாகும்). நான் உடலாலும், வாக்காலும் புலனடக்கமுடையவன். உணவின் மீதும் கட்டுப்பாடு உள்ளவன். அரஹத்த நிலையின் கைபற்றல் எனது அறுவடையாகும். முயற்சி எனது

எருதுகளாகும். நிப்பாணத்தின் எனது வண்டி, துன்ப துயரங்களின் ஒரு சுவடு கூட இல்லாத இடத்திற்கு என்னை கொண்டு சேர்கிறது. இந்த விவசாயம் அமிர்தத்தின் பலனை கொடுக்க வல்லது, துன்பங்கள் அனைத்திற்கும் விமோசனம் அளிக்க வல்லதாகும்.

அப்பிராமணர் புத்திசாலியாக இருந்தார். முற்பாரமீகள், புண்ணியங்கள் நிறையப் பெற்றவராக இருந்தார். “நீங்கள் உண்மையான விவசாயி. உங்களது விவசாயம் உண்மையில் மிக உயர்ந்த பலன்களை தர வல்லதாகும்” என்று கூறினார். கூறியபின், பகவானுக்கு பாயாசம் படைத்தார். ஆனால், பகவான் அதனை மறுத்து விட்டார்.

தர்ம உபதேசத்திற்குப் பின்னர் பெறப்படும் உணவு சாப்பிடத் தகாததாகும். அறியா மக்கள் உணவு தானத்தை தர்ம உபதேசத்தின் விலை என்று எண்ணிவிடுவர். ஆனால், தர்ம உபதேசமோ விலைமதிக்க முடியாததாகும். அதன் விலையை நிர்ணயிக்க முடியாது.

கஸி பாரத்வாஜர் பகவானின் அமுத மொழிகளால் மிக்க மகிழ்வடைந்து அவரது சீடராக ஆனார். அவருக்கு பகவானிடமிருந்து துறவறம் கிடைத்தது. விபஸ்ஸனா செய்தவாறு அவர் அரஹந்த நிலையை அடைகிறார். பாக்கியம் நிறைந்த பாரத்வாஜர் நற்பேறு பெற்றவரானார்!

## பத்துநாள் முகாமின் தொடக்க இரவு

நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ ஸம்மா ஸம்புத்தஸ்ஸ

அருள்நிறைந்த வரும், தகைமை சான்றவரும், நிறைவாக விளங்கிய தன்ஞானம் பெற்றவருமாகிய புத்தர் பெருமானுக்கு வணக்கம்.

நமன கரூங் குருதேவ கோ, சரணன ஸ்ஷ நவாய; தரம ரதன ஜசா டியா, பாப ஸமீப ந ஆய.
ஜஸா சகாயா தரம ரஸ, பிசயன ரஸ ந லுபாய; தரம ஸார ஜசா தியா, சிலகே தியே சுடாயா

என் குருவே, உமக்கு வெற்றி உண்டாவதாக! கருணைமிகுந்தவரே, உமக்கு வெற்றி உண்டாவதாக! என்றும் எனக்குப் பயனளித்து வருகின்ற அத்தகைய ஒரு தம்ம ரத்தினத்தை நீங்கள் எனக்கு வழங்கினீர்கள். தம்ம அமிர்தத்தை நீங்கள் என்னை சுவைக்கும் படிச் செய்திர்கள். புலனின்பம் எதுவும் கவர்ச்சிக்க இயலாது. அத்தகைய ஒரு தம்மத்தின் சாரத்தை நீங்கள் வழங்கினீர்கள்.

ரோம ரோம கிரதக ஹுவா ருண ந சுகாயா ஜாய; ஜீயூங் ஜீவன தரம கா, துகியன கீ ஸேவா கரூங்,
யஹீ உசித உபாய.
மயிர்க்கால்கள் ஒவ்வொன்றின் வழியாகவும் அந்த அளவு நன்றியுணர்வு வழிகிறது. நான் இக்கடனை திரும்பச் செலுத்த முடியாது. தம்ம வாழ்வை வாழ்ந்து, உலகில் துன்புறும் மக்களுக்கு அதன் பயனை நான் வழங்குவேன். (கடனைத் திரும்பச் செலுத்த) இது ஒன்று தான் வழி.

இஸ ஸேவா கே புஞ்ய ஸே, பலா ஸபீ கா ஹோய; ஜோ ஜோ ஆயே தப கரண, ஸபகா மங்கள ஹோய
ஸப கே துகடே தூர ஹோங். ஜனம ஜனம கே பந்தன டூடேங், அந்தரதம கீ காண்டேங் டூடேங்; மானஸ நிரமல ஹோய ரே.

அனைவரின் மனதிலும் தம்மம் உதிப்பதாக! துன்பத்திலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுவார்களாக! அவர்களின் உள்ளே இருக்கும் மனதின் முடிச்சுகள் அவிழ்க்கப்படுவதாக! அவர்களது மனம் தூய்மையாக்கப்படுவதாக! அனைவரும் மகிழ்வாகவும் அமைதியாகவும் இருப்பார்களாக!

**RNI TC NO: TNTAM 17399 / 26.03.07 RDIS NO: 126/07**
**REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA No. TNTAM/2007/22647 POSTAL REG NO: TN/CH©/140/11-13**

## தகவல் தொலைபேசி எண்கள்

**தம்ம சேது அலுவலக எண்கள்** (காலை 10:00 - மதியம் 1:00, மதியம் 2:00 - மாலை 5:00): 944428**0952**, 944429**0953**

**தம்ம மதுரா:** 09443728116, 8903428116

**முகாம் முன்பதிவு மற்றும் தகவல்களுக்கு**: 9444280952, 9444290953, 9940467453, 9442287592, 9444462583, 9042632889, 8015756339

**குழந்தைகள் முகாம்**: 8148135795

**இணையதளம் மூலம் பதிவு: http://courses.dhamma.org/en/schedules/schsetu**

**மின் அஞ்சல்: setu.dhamma@gmail.com**

## விபஸ்ஸனா தியான முகாம் கால அட்டவணை: 2012~2013

விபஸ்ஸனா தியான மையம், தம்ம சேது, 533, பழந்தண்டலம் ரோடு, வழி: திருநீர்மலை, திருமுடிவாக்கம்-அஞ்சல், சென்னை - 600044, தொலைபேசி: 9444290953, 9444280952

| மாதம் | 10-நாள் | ஸதிபட்டான | 20-நாள் | 30-நாள் | 3-நாள் | 1-நாள் | சிறுவர் முகாம் |
|---|---|---|---|---|---|---|---|
| டிசம்பர் | 5-16, 19-30 | | | | | 2 | 30 |
| **ஜனவரி 2013** | **2-13, 16-27** | | | | **30-2 (பிப்)** | **6** | |
| பிப்ரவரி | 20-3 | 2-10 | | | 14-17 | 3 | 17 |
| மார்ச் | 6-17, 20-31 | | | | 21-24 | 3 | |
| ஏப்ரல் | 10-21, 24-5 (மே) | | | | 4-7 | 7 | 21 |
| மே | 15-26 | | | | 9-12<br>30-2(ஜூன்) | 25 (புத்த பௌர்ணமி) | 5,12,26 |
| ஜூன் | 5-16 | 22-30 | | | 19-22 | 2 | 16 |
| ஜூலை | 3-14, 17-28 | | | | 18-21 | 7<br>22 (குரு பௌர்ணமி) | 14,28 |
| ஆகஸ்டு | 31 (ஜூலை)-11<br>14-25 | | | | 28-31 | 4 | 11,25 |
| செப்டெம்பர் | 11-22 | 31 (ஆக)-8 | | | 12-15 | 1 | 22 |
| அக்டோபர் | | | 26 (செப்)-17 | 26 (செப்)-27 | 30-2(Nov) | 6 | |
| நவம்பர் | 6-17, 20-1 (டிச) | | | | 21-24 | 3 | 17 |
| டிசம்பர் | 4-15, 18-29 | | | | | 1 | 1,29 |

### தமிழகத்தின் மற்ற இடங்களில் 10-நாள் தியான முகாம்:

| | **தேதி** | **இடம்** | **தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்** |
|---|---|---|---|
| 1 | **20-31 ஜனவரி 2013** | **இதயா ஆசிரமம், அரியாங் குப்பம், புதுவை** | **1. திருமதி. விஜயலட்சுமி 9940467453, 9444112771**<br>**2. திரு. குப்தா 9443038269**<br>**3. திரு. சீதாராமன் 9843044303** |

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014. Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER

Posted on: 12/12/2012
POSTED AT EGMORE
RMS/1 (PATRIKA CHANNEL)

அனுப்புனர்: Vipassana Meditation Centre
T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 ☏: 944429**0953**, 944428**0952**
e-mail: info@setu.dhamma.org,
Website: www.vri.dhamma.org, www.setu.dhamma.org, www.tamil.dhamma.org